Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | CC 201/2023 |
| Deposition of witness for | :: | PW. 3 |
| Name | :: | சிக்கந்தர் |
| Father's Name | :: | முகமது யூசுப் |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2025

---

1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்.
30.06.2025
முதல் விசாரணை :

1. நான் தற்போது விருதுநகர் கனிமவளத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஓட்டுநராக பணியில் உள்ளேன். கடந்த 22.08.2021ம் தேதி இரவு நேரத்தில் மேற்படி அலுவலகத்தில் இருந்தபோது இரவு ரோந்து போவதற்கு அப்போது கனிமவளத்துறை வருவாய் ஆய்வாளராக இருந்த அசா.1 சந்திரமோகன், தனித்துணை வட்டாட்சியராக இருந்த திருக்கண்ண முனியாண்டி ஆகியோருடன் TN 09 G 2738 என்ற பொலிரோ வாகனத்தில் இரவு 07.00 மணியளவில் கிளம்பி அருப்புக்கோட்டை தாலுகா பகுதிக்கு சென்றுவிட்டு திருச்சுழி பக்கமிருந்து வந்து காந்தி நகர் மேம்பாலம் அருகே 23.08.2021 அன்று அதிகாலை 02.30 மணியளவில் வந்து சேர்ந்தோம். அப்போது கிழக்கிலிருந்து மேற்காக திருச்சுழி பக்கமிருந்து TN 52 B 3646 என்ற லாரி வந்தது. அதில் கம்பிகல் (வேலி கல்) 6 யூனிட் இருந்தது. அசா.1, அசா.2 ஆகியோர் மேற்படி லாரி ஓட்டுநரிடம் விசாரித்து சீட்டு வாங்கி பார்த்தார்கள். வண்டியின் மேல் ஏறி பார்த்தார்கள். பார்த்து அதில் காணப்பட்ட முரண்பாடுகளுக்காக அசா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். எதிரிகள் மற்றும் சொத்துக்களை காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்கள். புகார் கொடுத்த அன்றும் 27.08.2021 அன்றும் தாலுகா

காவல் நிலையத்தில் என்னை விசாரித்தார்கள்.

**(எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. எனவே, குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.)**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | CC 201/2023 |
| Deposition of witness for | :: | PW. 2 |
| Name | :: | திருக்கண்ணமுனியாண்டி (எ) திருக்கண்ணன் |
| Father's Name | :: | இராமச்சந்திரன் |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2025

---

1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்.
30.06.2025
முதல் விசாரணை :

1. நான் விருதுநகர் மாவட்டம் திருச்சுழி வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியராக பணியில் உள்ளேன். கடந்த 22.08.2021 அன்று நான் புவியியல் மற்றும் சுரங்கதுறை விருதுநகர் மாவட்டம் தனித்துணை வட்டாட்சியராக (கனிமம்) பணியில் இருந்தபோது தனி வருவாய் ஆய்வாளர் அசா.1 சந்திரமோகன் அவர்களுடன் அரசு வாகனம்TN 09 G 2738 என்ற பொலிரோ வாகனத்தில் சிக்கந்தர் என்பவர் வாகனத்தை ஓட்ட அருப்புக்கோட்டை காந்தி நகர் பைபாஸ் சர்வீஸ் சாலையில் நின்று கொண்டிருந்தோம். அப்போது 23.08.2021 அன்று அதிகாலை 02.35 மணியளவில் திருச்சுழி ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்காக அருப்புக்கோட்டை நோக்கி TN 52 B 3646 என்ற டாரஸ் லாரி வந்தது. அதில் வேலிபோடுவதற்கு பயன்படுத்தப்படும் 6 யூனிட் கம்பிகற்கள் துண்டுகளாக இருந்தது. அந்த டாரஸ் லாரியின் ஓட்டுநர் ஆஜர் எதிரி ஆரோக்கியசாமியிடம் அனுமதி சீட்டு பற்றி கேட்டபோது 10392 என்ற எண்ணுள்ள அனுமதி சீட்டை கொடுத்தார். அதில் 3 யூனிட் அனுப்பப்பட்டுள்ளது என்றும் புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் தாலுகா

சித்தன்னவாசல் என்ற ஊரில் உள்ள குவாரியில் இருந்து தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலைக்கு செல்வதாகவும் 22.08.2021 க்குள் செல்லவேண்டும் என்று இருந்தது. நாங்கள் அந்த வாகனத்தை தணிக்கை செய்து நிறுத்தும் போது 23.08.2021 அதிகாலை 02.30 மணி ஆகும்.

2. மேலும் ஆஜர் எதிரி ஆரோக்கியசாமியிடம் வாகனத்தின் உரிமையாளர் யார் என்று கேட்டதற்கு செந்தில்குமார் என்று சொன்னார் . அனுமதி சீட்டில் இருந்த முரண்பாடுகளை பார்த்து அரசாணை (நிலை) 170 MMC–2 நாள் 05.08.2020 ன்படி அசா.1 சந்திரமோகன் மூலம் அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து பின்பு வட்டார அதிகார எல்லை கருதி அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்தில் புகார் கொடுத்து மேற்படி டாரஸ் லாரியில் ஏற்றப்பட்ட கற்களுடனும், ஆஜர் எதிரி டிரைவர் ஆரோக்கியசாமி என்பவருடன் ஒப்படைக்கப்பட்டது. தாலுகா போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. எனவே, குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.)**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | CC 201/2023 |
| Deposition of witness for | :: | PW. 1 |
| Name | :: | **சந்திரமோகன்** |
| Father's Name | :: | **சீனி** |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2025

---

1, 2 எதிரிகள் ஆஜர்.
30.06.2025
முதல் விசாரணை :

1. நான் விருதுநகர் மாவட்டம் உணவு வழங்கல் துறையில் பறக்கும் படை துணை வட்டாட்சியராக பணியில் உள்ளேன். கடந்த 22.08.2021 அன்று நான், என்னுடன் துணை வட்டாட்சியர் திருக்கண்ணமுனியாண்டி, ஓட்டுநர் சிக்கந்தர் ஆகியோர் TN 09 G 2738 என்ற பொலிரோ வாகனத்தில் இரவு ரோந்திற்காக 23.08.2021 அன்று நள்ளிரவு 02.35 மணியளவில் காந்தி நகர் மேம்பாலம் அருகே கனிமம் ஏற்றி வரும் வாகனங்களை தணிக்கை செய்து கொண்டிருந்தபோது திருச்சுழி பக்கமிருந்து திருச்சுழி ரோட்டில் TN 52 B 3646 என்ற டாரஸ் வந்தது. நான் அந்த வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தபோது அதில் நிலத்தில் வேலி போடும் வகையான கற்கள் ( கம்பி கல்) 6 யூனிட் இருந்தது. வாகனத்தின் ஓட்டுநரை விசாரித்தபோது ஆரோக்கியசாமி என்றும் புதுக்கோட்டை மாவட்டம் சித்தன்னவாசல் பகுதியில் இருந்து மேற்படி கம்பிகற்களை ஏற்றி வருவதாகவும் அவர் கொண்டு வந்த அனுமதி சீட்டை பார்க்கும் போது அதில் சீட் எண். 10392 என்றும் இருந்தது. அந்த சீட்டை பார்க்கும்போது 3 யூனிட் ஏற்றப்பட்டதாக இருந்தது ஆனால் வண்டியில் 6 யூனிட் இருந்தது. மேலும் அனுமதியானது 22.08.2021 அன்று நள்ளிரவு 12.00

மணிக்குள் உரிய இடத்தில் சேர்க்க வேண்டும் என்று இருந்தது. அந்த வாகனத்தில் உள்ள கற்கள் கழுகுமலைக்கு செல்ல வேண்டியதாக இருந்தது. மேலும் அனுமதி சீட்டில் valid upto என்ற வாசகம் குறிப்பிடப்பட வில்லை. வண்டியின் உரிமையாளரை பற்றி விசாரிக்கும்போது செந்தில்குமார் என்று தெரிய வந்தது. இது சம்மந்தமாக நான் முதலில் காவல் நிலைய எல்லை தெரியாமல் அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். பின்பு எல்லை தெரிந்தபின் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் தாலுகா காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு மற்றும் அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான் ( **அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது) புவியியல் மற்றும் சுரங்கத்துறை அனுப்புகை சீட்டு அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**

2. பின்பு தாலுகா காவல் நிலையத்தினர் வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தார்கள்.

**(எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. எனவே, குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.)**